**சிரம வாசனா நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சிரம வாசனா நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்களிலான மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருத்தப்பட்ட 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதி அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 3 : 3 உப பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு அதன் கூட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் அந்த கூட்டங்களில் செயற்படும் விதம் ஆகியவற்றை முறைமைப்படுத்தல் தொடர்பான விதிகளை உருவாக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், விதிகளை தயாரிப்பதற்கான 6(3) மற்றும் 3(3) பிரிவுகள் மற்றும் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 3.3 (g) (ii) மற்றும் 14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிகளை தயாரிப்பதற்கான வரைபு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் விதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நிதி அமைச்சின் ஊடாக சட்ட வரைபு திணைக்களத்திற்கு உரிய பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 3: 4: (2 எ) உப பிரிவு | தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயச் சபையொன்று, பிணக்கு தீர்ப்பாளர் ஒருவர் அல்லது தொழில் நீதிமன்றமொன்று அல்லது நீதிமன்றமொன்று எதிர்காலத்தில் ஏதேனும் எழுத்துமூல ஏற்பாட்டின் கீழ் சாட்டப்பட்டுள்ள அல்லது விசாரிக்கப்பட்டவாறுள்ள ஏதேனும் பணியாளர் ஒருவரின் பணி நீக்கம் மல்லது அதனுடள் தொடர்புடைய தொழில் தகராறு தொடர்பான வழக்கு நடவடிக்கைக்காக பணியாளர்களுக்கு | 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விதிகளை தயாரிப்பதற்குரிய 3(3) மற்றும் 6(3) பிரிவுகள் மற்றும் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 3(3)(g)(ii) மற்றும் 14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிகளை தயாரிப்பதற்காக வரைபு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடடன், விதிகள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக நிதி அமைச்சிற்கு | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சட்டரீதியாக நிவாரணத்தை வழங்குவதற்கு, நிதி ரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு, அமைய அடிப்படையில் உருவாக்கப்படும் விதிகளால் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைக்கு இணங்க வேண்டிய போதிலும், இந்த சட்ட உதவி வழங்குவதற்குரிய விதி 2021 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நிதி அமைச்சின் ஊடாக சட்ட வரைபு திணைக்களத்திற்கு உரிய பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | 13 : 1 உப பிரிவு | நிதியம் மற்றும் லொத்தர் சபையினால் இணங்கிய பெறக்கூடிய எண்ணிக்கையான லொத்தர் சீட்டுக்கள் மற்றும் சில லொத்தர் வகைகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் பேணப்பட வேண்டியதுடன், நிதியத்தினால் தேசிய லொத்தர் சபையுடன் அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல லொத்தர் சபையுடன் செய்து கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்த வரைப்பு நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிதி அமைச்சுக்கு இது வரை வருடாந்தம் அறிவிக்கப்பட்ட போதும் இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்படும் என வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலமுறை நினைவூட்டியும் இதுவரை எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iv) | 13 : 2 (அ) உப பிரிவு | நிதியம் மற்றும் லொத்தர் சபையின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற எண்ணிக்கையான லொத்தர் சீட்டுக்கள், லொத்தர் வகைகள் மற்றும் அவ்வாறு நடாத்தப்படும் சீட்டிழுப்புகளில் வழங்கப்படும் பரிசுகள் தொடர்பில், அந்த லொத்தர்களின் உரித்து கோரப்படாத பரிசுகள் | - மேற்படி - | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பில் மற்றும் லொத்தர் சீட்டுக்களிலிருந்து கிடைக்கும் பணத்தில் நிதியத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டிய போதிலும், நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | 14 : 1 உப பிரிவு | சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பில் அமுலிலுள்ள அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த அதிகாரச்சட்டத்தின் ஊடாக விதிகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படும் என சபை கருதும் விதிகள் தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விதிகள் 2021 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நிதி அமைச்சிற்கு வர்த்தமானியில் வெளியிடுவதை துரிதமாக மேற்கொள்வதற்காக 2021 திசெம்பர் 30 ஆந் திகதி நினைவுறுத்தற் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (vi) | அதிகாரச்சட்டத்தின் 4(1) (அ) பிரிவு மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத் | அமைச்சரின் அமைச்சின் செயலாளரே சபையின் தலைவராக இருக்க வேண்டும். 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட விசேட | 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் பிரகாரம், நிதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தின் 2 (1) (அ) பிரிவு | வர்த்தமானியின் பிரகாரம், அனைத்து நிதியங்களினதும் பணம் அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளமையால் நிதியத்தின் செயலாளராக நிதி அமைச்சின் செயலாளரே நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறான போதிலும், திறைசேரியின் செயலாளரின் MF1/05/01/178-SVF/02 ஆம் இலக்க 2021 யூன் 02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தலைவர் பதவிக்காக தொழில் அமைச்சீன் செயலாளரை நியமிப்பதற்காக நிதி அமைச்சரினால் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தாக தொழில் அமைச்சின் செயலாளர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வேண்டிய கட்டளைச் சட்டங்களின் கீழேயும் இந்த நிதியம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அந்த வர்த்தமானியில் தொழில் அமைச்சின் கீழும் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டளைச் சட்டங்கள் மாத்திரம் சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிரம வாசனா நிதியத்தின் தலைவரின் இராஜிநாமாவின் அடிப்படையில் MF1/05/01/178-SVF/02 ஆம் இலக்க 2021 யூன் 02 ஆந் திகதி சிரம வாசனா நிதியத்தின் தலைவராக தொழில் அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்ட கடிதம் தொழில் அமைச்சின் ஊடாக 2021 யூன் 22 ஆந் தகிதி சிரம வாசனா நிதியத்திற்கு கிடைத்துள்ளது. | |
| (vii) | அதிகாரச்சட்டத்தின் 6(அ) மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 3(1) பிரிவு | ஊழியர்களின் நலன் மேம்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஊழியர்களின் நலனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக பாடசாலைகள் நீண்டகாலமாக மூடப்பட்டிருக்கும் போது பாடசாலை உபகரணங்களை வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனால் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டாம் என தீர்மானிக்கப்பட்டது. | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (viii) | 6 (ஆ) பிரிவு | பணியாளர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டால், அந்த ஊழியர்களுக்கு நிதி மற்றும் பிற உதவிகள் வழங்கப்பட வேண்டும், ஆனால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான | ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்ட சந்தர்ப்பங்களில் அது தொடர்பிலான தகவல்கள் சேவையை முடிவுறுத்தும் பிரிவினால் உரிய நலனாளிகளுக்கு சிரம வாசனா | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதி மற்றும் பிற உதவிகள் வழங்கப்படவில்லை. | நிதியத்தினூடாக விபரங்கள் மற்றும் விண்ணப்பக் கடிதங்கள் அனுப்பப்பட்டு அவர்களுக்கு தொலைபேசியின் ஊடாகவும் நினைவுறுத்தப்பட்ட போதிலும், அதற்காக அவர்களின் பதில் கிடைத்திருக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ix) | திருத்தப்பட்ட அதிகாரச்சட்ட்தின் 3(3) எ (ii) பிரிவு | நிதி நிவாரணங்களுக்கு செயல்நிமித்தமாக உருவாக்கப்படும் விதிகள் மூலம் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை பணத்திற்கமைவாக காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இன் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விதிகளை தயாரிப்பதற்குரிய 3(3) மற்றும் 6(3) பிரிவுகள் மற்றும் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 3(3)(g)(ii) மற்றும் 14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிகளை தயாரிப்பதற்காக வரைபு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடடன், விதிகள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நிதி அமைச்சின் ஊடடாக சட்ட வரைபு திணைக்களத்திற்கு உரிய பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்ட வரைபாளரால் தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (x) | திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 6(3) 1 ஆம் பிரிவு | வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிக்ள தொடர்பில் குறிப்பிடப்பட்ட போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான விதிகள் வர்த்தமானியில் | திருத்திய அதிகாரச்சட்டத்தின் 6(3)(1) பிரிவின் பிரகாரம் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு உரிய விதிகளை உருவாக்குதல் தொடர்பில் 2021 திசெம்பர் 30 ஆந் திகதி | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | |
|---|---|
| வெளியிடப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், சட்ட வரைபாளரால் தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 2,140,835 ஆன மிகையாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,330,517 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 10,189,682 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 3,130,309 இனால் குறைவடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 7,059,373 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திரண்ட நிதியத்திலிருந்து திரண்ட நிதியத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 27,502,924 இல் ரூபா 13,000,000 மாத்திரம் கிடைத்திருந்ததுடன், ரூபா 14,502,924 பெற வேண்டியதாக காணப்பட்டது. மேலும், அந்த மீதியும் உள்ளடங்களாக பெற வேண்டிய மீதி ரூபா 346,643,444 தொகை 2004 ஆம் ஆண்டு முதல் திரண்ட நிதியத்திலிருந்து பெற வேண்டியதாக உள்ளதுடன், அந்த மீதியை திரண்ட நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு உரிய நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. திறைசேரியிலிருந்து போதிய பணம் பெற்றுக்கொள்ள முடியாமை, நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | தேசிய லொத்தர் சபையிலிருந்து கிடைக்கும் வருமானம் லொத்தர் சபையினால் சிரம வாசனா சபையின் பெயரிலான திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். ஒவ்வொரு வருடத்திற்கும் தயாரிக்கப்படும் வரவு செலவுத்திட்டப் பதிவேடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியேற்பாட்டுக்கு தேவையான பணம் திறைசேரியிடமிருந்து கடிதம் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது.<br><br>2004 ஆம் ஆண்டு முதல் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் | திறைசேரியுடன் கலந்துரையாடி நிதியத்தை பெற்று அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணம் 2008 ஆம் ஆண்டு வரையிலும் காசோலை மூலம் சிரம வாசனா நிதியத்திற்கு பங்குகளாக பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும், அந்த பணம் நிதியத்திற்கு நிலையான வைப்பின் அளவினை கருத்திற்கொண்டு வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள பணம் அவ்வப்போது சிரம வாசனா நிதியத்ததிற்க திறைசேரியினால் வழங்கப்பட்டது. சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்களினுள் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான நிலையான வைப்புகள் பேணிச் செல்லப்படுகின்றமையால் நிதியத்தின் நிதி ரீதியான பணிகளை முகாமை செய்வதற்காக சிரம வாசனா நிதியத்திற்கு தற்போது சொந்தமாக உள்ள நிலையான வைப்புகளில் உள்ள பணம் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் எமக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதுள்ளை மாவட்டத்தின் தோட்டத் தொழிலாளர்கள் (Estate Labour Workers) இற்காக 200 சுகாதார | சுகாதார மலசலக்கூட வசதிகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் மற்றும் தொழிலாளர் குடும்பங்களை இலக்கிட்டு, சுகாதார | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நலன்புரி நடவடிக்கைகள் |

மலசலக்கூட வசதிகளை சிரம வாசனா நிதியத்திலிருந்து நிர்மாணிப்பதற்காக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தில் உள்ள நிதியத்திற்கு சொந்தமான தொகையில் ரூபா 10,000,000 ஆன தொகை 2021 பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டினுள் ரூபா 5,950,000 தொகை பதுள்ளை மாவட்ட செயலகத்தின் ஊடாக நலனாளிகளுக்கு செலுத்துதல் மற்றும் செயற்திட்டத்தின் ஏனைய செலவினங்களாக ரூபா 243,206 ொதகை செலவிடப்பட்டிருந்தது. 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் ஊழியர்களின் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோரின் நலனை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த நோக்கங்களுக்கு முரணாக 140 குறைந்த வருமானம் பெறுவோருக்கு இந்த மலசலக்கூட செயற்திட்டத்தின் நலன்களை பெற்றுக்கொள்ள இடமளிக்கப்பட்டிருந்ததுடன், மொத்த நலனாளிகளின் எண்ணிக்கையின் 70 சதவீதமாக காணப்பட்டது.

மலசலக்கூட வசதிகளை வழங்கும் முன்னோடி செயற்திட்டமொன்றாக பதுள்ளை பிரதேச செயலகப் பிரிவில் வாழும் அவ்வாறான குடும்பங்களுக்காக 200 சுகாதார மலசலக்கூடங்களை நிர்மாணிக்கும் பணிக்காக சிரம வாசனா நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் இயலுமை தொடர்பில் கருத்திற்கொண்டு, அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தினை கருத்திற்கொண்டு 2020 திசெம்பர் 17 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் விசேட செயற்திட்டமொன்றாக ரூபா 10 மில்லியன் தொகை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தயாரிக்கப்படும் 2021 ஆம் ஆண்டுக்குரிய அடிப்படை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்டத்தை உள்ளடக்குவதற்கு போதிய காலம் இல்லாதிருந்ததுடன, அதன் பின்னர் 2020 திசெம்பர் மாதம் இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அந்த செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 2021 திசெம்பர் 09 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திலும் 2021 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ள குறைந்த வருமானம் பெறும் மற்றும் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்திற்குரிய விசேட செயற்திட்டமொன்றாக இந்த செயற்திட்டத்தை உள்ளடக்குதல் தொடர்பில் மீண்டும் ஒரு தடவை மேவுகை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட வேண்டும்.